CC.NO. 43/2020 PW-4

நாள் : 22.02.2024

பெயர் : தினகரன்

க/பெ : எத்திராஜ்

**(எதிரி 1 ஆஜர். எதிரிகள் 2 மற்றும் 4 வது ஆஜரில் இல்லை. எதிரிகள் 2 மற்றும் 4 சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி 3 இறந்து விட்டார்.)**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்ன தொழில் செய்து வருகிறீர்கள் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். நான் சொந்தமாக விவசாயம் செய்து வருகிறேன். போலீசார் விசாரணயின் போது நீங்கள் கூலித்தொழில் செய்து வருகிறேன். நீங்கள் இதற்கு முன்பு ஊராய்சி தலைவராக இருந்திர்களா என்றால் என் தம்பி தான் இருந்து இருக்கிறார். அசா3 மகேஸ்வரி உறவினர் சாந்தா உங்கள் ஊரைச்சேர்ந்தவர் என்றால் ஆமாம். அசா3 வின் மகள் அசா1 புவனேஸ்வரி உங்களுக்கு தெரியுமா என்றால் ஆமாம். எதிரி ஜெயகணேசும் அசா1 ம் திருமணத்திற்கு பிறகு எங்கு வாழ்ந்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும். எங்கு வாழ்ந்து வந்தார்கள் என்றால் புளியங்கன்னில் வாழ்ந்து வந்தார்கள். நீங்கள் சொல்வது தவறு அவர்கள் இருவரும் ஆற்காட்டில் ஒரு வாடகை வீட்டில் வசித்து வந்தார்கள் என்று சொன்னால் இல்லை புளியங்கன்னில்

தான் வசித்து வந்தார்கள்.

நீங்கள் சொல்வது போல் புளியங்கன்னில் அசா1ம் எதிரியும் குடியிருந்த வீடு எந்த திசையில் இருந்தது என்றால் தெரியாது. நீங்கள் குறிப்பிடும் புளியங்கன்னு வீட்டிற்கு அருகாமையில் யார் யார் வீடுகள் இருந்தது என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் ஆமாம். உங்களை போலீசார் விசாரணையில் 27.02.2020 நீங்களும் ராஜசேகரும் புளியங்கன்னிற்கு சென்று கொண்டிருந்தபோது போலீசார் விசாரித்தாக சொல்லப்பட்டு இருந்ததா அது சரியல்ல. போலீசார் விசாரணையில் நீங்கள் சம்பவ இடத்திற்கு எந்த வாகனத்தில் சென்றீர்கள் அதன் பதிவெண் என்ன என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் ஆமாம். இருசக்கர வாகனத்தில் சென்றதாக தான் சொல்லியுள்ளேன். 27.02.2020 அன்று நீங்கள் சொல்வது போல் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை எதிரி ஜெயகணேசு வீடும் எங்கு உள்ளது என்பது தெரியாது, நீங்கள் ஆவணத்தை காவல்நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் வைத்து தான் செய்தேன். நீங்கள் சம்பவ இடம் செல்லாத காரணத்தினால் தான் உங்களால் அந்த வீட்டின் திசையை அருதியிட்டு கூற முடியும் என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் உங்கள் முதல் விசாரனை மற்றும

போலீசார் விசாரணையிலும் முரண்பாடுகள் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. ஆய்வாளர் சுப்புலட்சுமி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

S/d.***********
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.